# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2034/8 - 2017 අගෝස්තු මස 28 වැනි සඳුදා - 2017.08.28

*2034/8 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு தியத்தலாவை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் தொடன்வத்த நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிப்பகுதியின் உரித்துடைமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஓகத்து 17,*
*5/ 2/ 1/ 1268.*

**அட்டவணை**

*பதுளை மாவட்டத்தில், ஹபுத்தளை கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 63ஜீ, தொடன்வத்த கிராம அலுவலர் பிரிவில் தொடன்வத்த கிராமத்தில் அமைந்துள்ள அம்பலன்கபோல்ல வத்த என்றழைக்கப்படும் காணியின் மொத்த விஸ்தீரணத்தில் 4 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :-*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | திரு. எம். எம். விக்ரமசிங்க உரிமை கோருகின்ற காணிப்பகுதி ; |
| கிழக்கு | : | திரு. டி. எம். கருணாரத்ன உரிமை கோருகின்ற காணிப்பகுதி ; |
| தெற்கு | : | திரு. டி. எம். கருணாரத்ன உரிமை கோருகின்ற காணிப்பகுதி ; |
| மேற்கு | : | தியதலாவை - கஹகொல்ல வீதி (தொடன்வத்த வீதி). |

*காணிக்கு உரிமைகோருகின்றவரின் பெயரும் முகவரியும் : திருமதி டி. டி. சித்ரா சியாமலி,*
*இனிஷனன் கார்டன் சிடி,*
*தியத்தலாவை.*

*9- 267*


1A – G 26168 – 29 (2017/08)



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

LAND/MP/2559

திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின்கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1947/09 ஆம் இலக்க, 2015.12.28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 4A பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் காணியின் பெயர் துல்தொட சொஹோன் கனத்த பதன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், நிலஅளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் B/ACQ/HLD/2016/345 ஆம் இலக்க முன்கூட்டிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது அடகேஹெல் எல்லே பதன மற்றும் தோடங் ஹேன துபுல்கஹ தென்னே ஹேன எனவும், காணியின் விஸ்தீரணம் 1.0976 ஹெ. எனவும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
"லக்திய மெதுர",
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 17,
5/2/1/1153.

9-268

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.